Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 199

புதன்கிழமை
12 ஜூன் 2024

வைகாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"வடக்கு - கிழக்கை பிரிச்சு பிரச்சினையை பெரிசாக்கிப் போட்டு இப்ப மறப்பம் கறப்பம் எண்டு கண்டறியாத கதை கண்டியளோ"



## வடக்கு - கிழக்கை

# பிரித்தோம்; மறப்போம்!!

## யாழில் வைத்து தெரிவித்தார் அநுர

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு - கிழக்கைப் பிரித்தது ஜே.வி.பி. என்ற கடந்த காலத்தைப் பேசி எந்தப் பயனும் இல்லை. ஆதலால், எதிர்காலம் தொடர்பில் தற்போது சிந்திப்போம் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

1

## வடக்கு – கிழக்கை இணைப்பாரா அநுர?

### தனிநபர் தீர்மானம் கொண்டுவருமாறு சிவாஜிலிங்கம் சுடச்சுடப் பதிலடி

யாழ்ப்பாணம், ஜூன் 12

வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டமை தொடர்பான கடந்த காலத்தை மறக்குமாறு தெரிவிக்கும் அநுர, வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையை முன்வைப்பாரா?

1

## பொதுவேட்பாளரையே புளொட் ஆதரிக்கும்

### சித்தார்த்தன் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரையே புளொட் ஆதரிக்கும் என்று அநுரகுமாரவிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:-

அநுரகுமார திஸாநாயக்க தன்னுடைய தேர்தல் பரப்புரையின் ஓர் அங்கமாக என்னையும் எங்கள் கட்சியின் பிரதிநிதிகளையும் இன்று

1

## முழுமையான பொலிஸ் அதிகாரம்; அப்படிச் சொல்லவேயில்லை சஜித்!

### கொழும்பில் வைத்து புது உருட்டு

கொழும்பு, ஜூன் 12

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் போது சமூக மற்றும் சுற்றாடல் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை.

1

## தமிழரசுடன் விரைவில் ஐ.தே.க.வும் பேச்சு!

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன பேச்சு நடத்தியுள்ள நிலையில், விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்தவுள்ளது.

1

## இந்திய மீனவரின் தடையை நீடிக்குமாறு மனு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்திய மீனவர்களின் தடைக்காலத்தை நீடிக்குமாறும் இந்திய மீனவர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு கோரியும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் மீனவர்களால் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் தலைவரும் வடக்கு

1

## கடலுக்குச் சென்ற இருவரைக் காணோம்

அனலைதீவு, ஜூன் 12

அனலைதீவிலிருந்து நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற இருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமரசிங்கம் மற்றும் கேதீஸ்வரன் ஆகிய இருவரையே காணவில்லை. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. காணாமல் போனோரை கடலில் தேடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-9-125)

### வடமாகாணத்தில்



## 70 வீதமான வாக்குகள் சஜித்துக்கே விழுமாம்!

### திஸ்ஸ அத்தநாயக்க நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 12

வடக்கில் உள்ள மக்களில் 70 வீதத்துக்கும் மேற்பட்டவர்களின் வாக்குகள், ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கே கிடைக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1

## தேர்தலைப் பிற்போட்டால் ஐ.தே.க.வுக்கு முடிவு உறுதி

### மஹிந்த மிரட்டல்



கொழும்பு, ஜூன் 12

தேர்தலைப் பிற்போடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முற்பட்டால் அதுவே அந்தக் கட்சிக்கு இறுதிப் பயணமாக அமைந்துவிடும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்

1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரவணபவனின் ஏற்பாட்டில் இலவச வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஏற்பாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளை அலுவலகத்தில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறிக்கான இலவச வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. ஆர்வமுள்ள 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் 0776603563 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியும். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

(ஒ-25,125)

# கனவு கைகூடுமா? பொருளாதாரமே தடை

### சாதிக்கத் துடிக்கும் மாணவியின் ஆதங்கம்



மன்னார், ஜூன் 12

**நான் தேசிய மட்டத்தில் ஒரு சிறந்த கிரிக்கெட் வீராங்கனையாகத் திகழ வேண்டும் என்று அவா இருக்கின்றபோதும் எனது வீட்டின் பொருளாதார சிக்கலால் எனது கனவு கைகூடுமோ என்ற அச்சம் இருக்கின்றது. இருந்தும் உதவிகள் கிடைக்குமானால் வட மாகாணத்துக்கு ஒரு தமிழ் பெண்மணியாக புகழை ஈட்டிக் கொடுப்பேன் என்ற நம்பிக்கை இருக்கின்றது.**

-இவ்வாறு தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட, இலங்கையின் வன்பந்து கிரிக்கெட் கழக மட்டத்தில் விளையாடி வரும் பேசாலை மன்.சென்.பற்றிமா மகா வித்தியாலய மாணவி சயிந்தினி தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் முதல் கிரிக்கெட் வீராங்கனையாக தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவி சயிந்தினி ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது, எனக்கு கல்வியும் கிரிக்கெட்டும் இரு கண்கள். தேசிய மட்டத்தில் விளையாடுவதற்கு இப்பொழுது வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் வீரர்கள் தெரிவாகும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

இந்த நிலையில் வடக்கிலிருந்து நான் முதல் பெண்மணியாக கிரிக்கெட் விளையாடுவதற்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது எனக்கு பெருமையாக இருக்கின்றது. நான் கொழும்பில் தங்கியிருந்து சிறந்த பயிற்சிகளை பெறுவதற்கு ஆவலாக இருக்கின்றேன். இருந்தும் எங்கள் வீட்டின் பொருளாதாரம் இதற்கு ஒரு தடையாக உள்ளது. உதவிகள் கிடைக்குமாகில் வடமாகாணத்துக்கு பெருமையை ஈட்டிக் கொடுப்பேன். பாடசாலை நிர்வாகம் மற்றும் எனது பெற்றோரின் ஒத்துழைப்பு இருந்திருக்காவிடில் நான் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கமுடியாது -என்றார்.

(ஒ,25,60)

## மூன்று பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மேற்கில் உள்ள மூன்று பாடசாலைகளில் உயர்தரக் கணித, விஞ்ஞானப் பிரிவுப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதால், இந்தப்பிரிவு மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அக்கராயன் மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், பூநகரி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களே இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளனர். இதனால் மாணவர்கள் தமது கற்றலுக்காக கிளிநொச்சி நகரத்திலுள்ள பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் செல்லவேண்டியுள்ளதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் வலயக் கல்விப் பணிமனைக்கு சென்று ஆசிரியர்களை நியமியுங்கள் என கோரிக்கைகள் விடுத்தபோதும் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கும் இதுபற்றி தெரியப்படுத்தியுள்ளோம். எனவே பின்தங்கிய கிராம மாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டு விரைவாக ஆசிரியர் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து தருமாறு பெற்றோரும், மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-25,27)



## குருதி சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கிவைப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 12

மல்லாவி ஆதார மருத்துவமனையின் பயன்பாட்டுக்கான குருதிச் சுத்திகரிப்பு இயந்திரம், கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியனுசரணையில், மருத்துவமனையின் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வழங்கி வைக்கப்பட்டது.

மல்லாவி ஆதார மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் பி.எச்.எஸ். தேஷாஞ்சலி மற்றும் யாழ்.போதனா மருத்துவமனையின் சிறுநீரக மருத்துவ ஆலோசகர் மருத்துவர் பிரம்மா.ஆர்.தங்கராசா ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பத்திரன, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம். உமாஷங்கர், மல்லாவி மருத்துவமனையின் முன்னாள் மருத்துவ அதிகாரிகள், மாவட்ட மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் சமூக சேவகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ப-35)

### யாழ். பல்கலையில்

## சமகால முகாமைத்துவ 8 ஆவது ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 12

"உலகளாவிய நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் மாற்றம்" என்ற ஆய்வுக் கருப்பொருளிலான 8 ஆவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் ந. கெங்காதரன் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீட மண்டபத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளது. மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீ சற்குணராஜா, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் சைமன் பெல், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டி.என். ஜெயந்தா மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த ஆய்வு மாநாட்டில் வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகாமைத்துவம், நிறுவன நடத்தை, வணிகத் தொழில்நுட்பம், நிதி மற்றும் கணக்கியல், சந்தைப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார சமூககொள்கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளைக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாண வளாகம் எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தியானதையும், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தி ஐந்து வருடங்களைபூர்த்தியானதையும் முன்னிட்டு பல்கலைக்கழகத்தின் பொன்விழா மற்றும் பீடத்தின் வெள்ளி விழாவின் அடையாளமாக இந்த மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-25)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 12

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 9 தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. " மாணிக்கவாசகரும் திருபொற்சண்ணமும் " எனும் விடயப் பொருளில் சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரன் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ,25)

************************

யாழ்ப்பாணம், ஜூன் 12

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. "உள்ளம் பெருங்கோவில்" எனும் விடயப்பொருளில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச. நவநீதன் சிறப்புச் சொற்பொழிவினையும், ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் நிகழ்த்தவுள்ளனர். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(ஒ,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். நிதியுதவியை சீராகப் பேணுங்கள்

## பந்துல வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 12**

**2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, யார் அரசாங்கத்தை நிர்வகித்தாலும்,2028 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணயநிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படவேண்டும்.**

- இவ்வாறு நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பல்வேறு தரப்பினரும் போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். சம்பளம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட அனுபவத்தின்படி அதற்கு 5018 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. மேலும் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் எந்த அரசாங்கமும் இந்த நிதியை ஈடுசெய்ய வேண்டும்.

சர்வதேச நாணயநிதியம் 663 மில்லியன் டொலர்களை நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் வழங்க இணங்கியுள்ளது.

யார் அரசாங்கத்தை வழிநடத்தினாலும் 2028 வரை சர்வதேச நாணயநிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடன் ஒப்பந்தங்களைப் பேணவேண்டும்- என்றார். (ச-இ)

# ரணிலின் வெற்றி கட்டாயத் தேவை!

## செஹான் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 12

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இல்லாவிடின் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படக்கூடும்.

-இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினதோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியினதோ வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க வரமாட்டார். மக்கள் வேட்பாளராகவே அவர் களமிறங்குவார். கட்சி ரீதியாகப் பிளவுபட்டு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் இன்று நாடு இல்லை. ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டை அழிவு திசையை நோக்கிக் கொண்டு செல்லும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி எடுக்காது. பெரமுனக் கட்சிக்குள் உள்ள பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்ற முடிவிலேயே உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# வாக்கெடுப்புகள் நடத்த ரணிலுக்கு இஷ்டமில்லை

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி எவருடனும் கலந்துரையாடவில்லை. முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடக்கும். அதில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார் என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் முதலில் பொதுத்தேர்தல் நடக்குமா, ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சர்வஜன வாக்கெடுப்போ, பொது வாக்கெடுப்போ அவசியமற்றது. ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும் என்பது உறுதி.

ஸ்ரீலங்கா பெரமுனக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் பொதுவேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

# ரணிலுக்கு ஆதரவு; பெரமுனவில் பிளவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என்றோ, அவருக்கு ஆதரவு வழங்குவோம் என்றோ எப்போதும் குறிப்பிடவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு வெகுவிரைவில் அத்தீர்மானத்தை அறிவிப்பார். எமது தீர்மானத்தை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# முற்போக்குச் சிந்தனையுள்ள இளையோர் நாட்டுக்குத் தேவை

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு முற்போக்குச் சிந்தனைகொண்ட இளைஞர் சமூகம் நாட்டுக்கு அவசியம் என்று தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எமது பொருளாதாரம் அரசியல் தாக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. எங்கள் சிறு குழந்தைகளின் சிந்தனை மனப்பான்மை பாதிக்கப்பட்டது. ஒரு புதிய பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில், இளைஞர்களின் முற்போக்கான சிந்தனையும் அதனுடன் இணைந்து மேம்படுத்தப்படவேண்டும்.

பிள்ளைகளின் கல்வி, அறிவு, பயிற்சி ஆகியவற்றை வளர்க்கவில்லை என்றால், எத்தனை பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டுவந்தாலும், அதனால் பலன் பெறமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையாம். என்னதான் இக்கரை திறமா இருந்தாலும் அக்கரையைப் பற்றி புளுகிறதிலையும், அதை உயர்த்திப் பிடிக்கிறதிலையும் சிலருக்கு தனிச்சுகம் போல. யாழ்ப்பாணத்தில இருக்கிற பெரியாஸ்பத்திரியில சிவராத்திரி கொண்டாட அனுமதி தரச்சொல்லி ஒரு சைவ அமைப்பொண்டு கேட்டது. பொதுவாவே சைவக்காரர், சிவராத்திரியை கோயிலில மட்டுமில்லாமல் இப்பிடி பொது இடங்களிலையும் செய்யிறவை. இரவிரவா தேவாரம், இசைக்கச்சேரி, டான்ஸ், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் எண்டு வைப்பினம். சிவராத்திரிக்கு நித்திரை முழிக்கிறவை இதுகளைப் பாத்தபடி விரதத்தை முடிப்பினம். மகசின் ஜெயிலுக்க கூட, ஒவ்வொரு வருசமும் சிவராத்திரி செய்யிறவை. ஆனால் பெரியாஸ்பத்திரிக்காரர், அதுக்கு அனுமதி தர ஏலாதெண்டிட்டினம். அதோட நந்திக்கொடி கூட கட்ட ஏலாதெண்டும் கைவிரிச்சிட்டினம். இத்தனைக்கும் ஆஸ்பத்திரிக்கு வாறவையிலையும், அங்க வேலை செய்யிறவையிலையும் முக்கால்வாசிப்பேர் சிவராத்திரி விரதம் பிடிக்கிற ஆக்கள் தான். அப்பிடி இருந்தும் ஆஸ்பத்திரியில எந்த மத அடையாளமும் இருக்கக்கூடாது எண்ட 'தூரநோக்கோட' அனுமதி குடுக்காமல் விட்டிட்டினம். மத அடையாளத்தைப் பேண இட மளிக்கமாட்டம் எண்டுற அதே ஆஸ்பத்திரியிலதான், ஒவ்வொரு வார்ட்டிலையும் சில மதக்குழுக்கள் வருத்தக்காரருக்கு 'செபிக்கப்போறம்' எண்டு கும்பலா வந்து மதமாற்றம் செய்யினம். அப்ப அது உந்த மத அடையாள நடவடிக்கைக்குள்ள வராதோ?

சரி, அதைவிடுவம். இப்ப விசயத்துக்கு வருவம். வாற 21 ஆம் திகதி புத்தரின்ர பொசன் போயா வருகுது. அந்தப் பொசன் போயாவை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில கொண்டாடப்போயினம். இதுக்கு அங்க வேலை செய்யிற கன டாக்குத்தர்மார் எதிர்ப்பாம். ஆனால் இதை நடத்தியே தீருவம் எண்டு ஆஸ்பத்திரிப் பெரியாக்கள் ரண்டு பேர் ஒற்றைக்காலில நிக்கினமாம். நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர் பொசனை நடத்த வெளிக்கிட்டதில கூட ஏதும் ஆதாயங்கள் இருக்கலாம். ஆனால் கண்ணான கண்ணே எண்டு இஞ்சை இருக்கிற மற்றப் பெரிய டாக்குத்தருக்கு இந்தப் பொசன் யோசினை 'மலரு' வெளிக்கிட்ட மர்மம் என்னெண்டு தான் விளங்காமல் கிடக்குது. "இஞ்ச சிங்கள டாக்குத்தர்மார், நேர்ஸ்மார் வேலை செய்யினம். அவைக்காக கொண்டாடுவம்" எண்டு ஒரு நியாயம் பிளக்கக்கூடும். அந்த நியாயமும் சரிதான். ஆனால், அதே ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவையில முக்கால்வாசிப்பேர் பிடிக்கிற சிவராத்திரிக்குமெல்லோ அனுமதி குடுத்திருக்கவேணும்? புத்தருக்கு ஒரு நீதி, சிவபெருமானுக்கு இன்னொரு நீதியா?

அதவிட புத்தரைவிடவும் சிவபெருமானுக்குத்தான் உந்த ஆஸ்பத்திரியளில முன்னுரிமை குடுக்கவேணும். ஏனெண்டால், "சாவு, காயம் எல்லாம் எல்லாருக்கும் வாறதுதான், அதை மாத்த ஏலாது. வாறதை அனுபவிக்கிறதுதான் மனிதப்பிறப்பு" எண்டு மருத்துவத்துக்கு எதிரா தத்துவ முத்துகளைத் தெறிக்கவிட்டவர் தான் உந்தப் புத்தர். ஆனால் உந்த வருத்தங்களுக்கெல்லாம் வைத்தியம் செய்து மாத்தலாம் எண்டு, அதுக்கான முறையளையும் சிவபெருமான் சொன்னவரெண்டதால அவரை வைத்தியநாதன் எண்டும் கும்பிடுறவை. கனபேரின்ர வருத்தங்களை தன்ர அற்புதத்தால சிவன் மாத்தினவர் எண்டும் ஐதீகம். அப்ப சிவராத்திரியைத்தானே ஆஸ்பத்திரிக்காரர் கொண்டாடியிருக்கவேணும். ஆனால் சிவராத்திரியால ஆதாயம் வராது. புத்தரின்ர பொசன் போயாவைக் கொண்டாடினால், மேலிடத்து அனுக்கிரகம் கிடைக்குமெல்லோ. கடவுளிலகூட ஆதாயம் பாக்கிற காலமாப் போட்டுது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பொறுமை அவசியம். பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்படும். காரியங்கள் சாதகமாக முடியும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையற்ற செலவுகளும் ஏற்படும். கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படும். செலவுகளால் சஞ்சலம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நல்ல செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். சுபச்செய்தி வரும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவுமிருக்காது.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியூர்ப் பயணம் தவிர்ப்பது நல்லது. சுபச்செலவுகள் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். உடல்நலனில் கவனம் தேவை. விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். ஆதாயம் உண்டாகும். நன்மைகள் அதிகரிக்கும். பிரச்சினை ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். முருகப்பெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.


## திசைமுகப்படுத்தல் பயிற்சி நிகழ்வு

முல்லைத்தீவு, ஜூன் 12
முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள, கிராம அலுவலர்களுக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சியின் ஆரம்பநாள் நிகழ்வு, மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் யோ. மதுசூதனன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமா மகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் எஸ்.குணபாலன், மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் எஸ்.ஜெயகாந், மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ந.சற்குணேஸ்வரன், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மு.முபாரக், நிர்வாக உத்தியோகத்தர் றெஜிஸ் விமலேந்திரன், ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-13)



## யாழ்ப்பாணக் கல்லூரி சதுரங்கத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 12
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான சதுரங்கப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
இரண்டாம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், நான்காம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)



## திறன்விருத்தி வகுப்பறை சஜித்தால் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12
கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் திறன் விருத்தி வகுப்பறை திறப்புவிழா பாடசாலை அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.
சுமார் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான கணினிகள், திறன் பலகை கொண்ட வகுப்பறைக் கட்டடத்தை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ திறந்ததுடன், பாடசாலைக்கென ஒரு இலட்சம் ரூபா நிதியையும் வழங்கி வைத்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் உட்படப் பாடசாலை சமூகத்தினர் கலந்துகொண்டனர். (எ-25,100)

## பொலிஸ் பிரதானிகள் அநுரவுடன் கைகோர்ப்பு

கொழும்பு, ஜூன் 12
குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஷானி அபயசேகர, சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி செனிவிரத்ன உட்பட ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர்.
கடந்த 9 ஆம் திகதி மகரகமவில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தி இளைஞர் அணி மாநாட்டில் அவர்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளனர்.
அதேவேளை இம்மாதம் முதலாம் திகதி பொறியியலாளர்கள் அணி ஒன்றும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளது. (ச-6)



## கத்திக்குத்து மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 12
கோப்பாய்ப் பகுதியில் நடந்த கத்திக்குத்துச் சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி நடந்திருந்தது. கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து சிறு தொகை கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸாரால் உரும்பிராயைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)



## சிறுவர் பூங்கா திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 12
பண்ணாகம் - காலையடி தெற்கு, மறுமலர்ச்சி மன்றத்தின் சிறுவர் பூங்கா திறப்பு விழா, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.
புலம்பெயர் தேசத்தவர்களின் நிதிப்பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வில், விருந்தினர்களாக தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் ந. இரவீந்திரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் மற்றும் மன்றத்தின் முன்னாள் பொறுப்பாசிரியர், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டி

## சிவாஜிலிங்கம் அதிரடி

யாழ்ப்பாணம், ஜூன் 12

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் அல்லது அந்த முயற்சிகளில் இருந்து பின்வாங்கினால் நான் பொது வேட்பாளராகக் களமிறங்குவேன் என்று தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்முறை மக்கள் மத்தியிலும் பொதுவேட்பாளர் விடயம் பேசப்படுகிறது. எனவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில், ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் நான் சுயேச்சையாகப்போட்டியிடுவேன் - என்றார். (ம-125-66)




# மலைப்பாம்பு வயிற்றிலிருந்து மீட்கப்பட்ட குடும்பப் பெண்!

இந்தோனேஷியாவில் மாயமான பெண் ஒருவர் மலைப் பாம்பின் வயிற்றுக்குள் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மத்திய இந்தோனேஷியாவின் தெற்கு சுலவேசி பகுதியின், கலேம்பங் கிராமத்தில் வசித்து வந்த 45 வயதான ஃபரிதா எனும் பெண் காணாமற்போயிருந்தார். அந்தப் பகுதியில் தொடர்ந்தும் கிராமத்தினர் தேடுதலைத் தீவிரப் படுத்தியபோது, அங்கு மலைப் பாம்பு ஒன்று பெரிய வயிற்றுடன் இருப்பதைக் கண்டுள்ளனர். (எ-இ)

## 60 ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



**அமரர் தர்மலிங்கம் நடனேந்திரன்**
**(முன்னாள் வலி மேற்கு பிரதேசசபை தவிசாளர்)**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (13.06.2024) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**


பிள்ளையார் கோவில் வீதி,
சித்தன்கேணி.

மனைவி
தொ.பே : 077 759 3797

(CS 7728) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 07 . 1943



மறைவு 11 . 06 . 2024

**சிவலோகநாதன் லோகேஸ்வரி (சின்னக்கிளி)**

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் லோகேஸ்வரி நேற்று (11.06.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-அன்னலட்சுமி (பரியாரியார்), தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவலோகநாதனின் அன்பு மனைவியுமாவார். சுகன்யா (சுதா-பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவபாலன் (பாலன்-யாழ். மாநகர சபை), குகப்பிரியா (குகா-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சரவணபவன் (பிரான்ஸ்), பாரதி (பிரான்ஸ்), சாந்தநாயகி, திலீபநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீபன் (சதிஸ்-பிரியா), சில்வன் சந்துரு, சஞ்சீவ் சுந்தர், ஹரிஸ், பாணு, சரண், சிவரூபன், கௌதமன், ஜனுக்சன், லூட்சிகா, சுவிந்தன், இந்துஜன் ஆகியோரின் பேர்த்தியும் அயனின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கௌரி (பெரியகிளி), லோகேந்திரராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணரின் உடன்பிறவா சகோதரியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் (இந்திரன்), மற்றும் மதிவதனசோதி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், திருமகளின் சிறியதாயும், ராமமூர்த்தி காலஞ் சென்றவர்களான கோமதி, முகுந்தன் மற்றும் தயாளன் காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் மயூரன், அமுதினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 13.06.2024 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிகைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயாணத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்: குடும்பத்தினர்.**
சிவபாலன் 077 6452 239
சுகன்யா +33 62 656 3738
சிவகுமார் +33 62 582 3686
குகப்பிரியா +33 76 949 1537

185/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(CR 42635) V-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 06 . 1959



இறப்பு 11 . 06 . 2024

**அமரர் கந்தையா வசந்தகுமார்**

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வசந்தகுமார் (11.06.2024) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - காசிப்பிள்ளையின் அன்பு மகனும் புனிதம் (பிறை) யின் அன்புக் கணவரும், நிஷாந் (கோபி), வனக்ஷன் (லவன்), பிரசாந்தன் (சுகன்), மதுஷாலினி (மது), கபிஷாலினி (காவியா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விந்துஜா, அனுஷியா, ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சோபியாவின் (இத்தாலி) பாசமிகு பேரனும், குமாரசாமி காலஞ்சென்ற இராசலஹ்சுமி, லலிதா, றஞ்சிதா, மஞ்சுலாதேவி, சண்முகராசா, சியாமளா ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஷ்பானந்தன், பஞ்சாட்சரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மீசாலை கிழக்கு
மீசாலை

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 036 0321**

(CR 42073) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் வெளியீடு

மறைந்த முதுபெரும் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் சிறுகதைகளின் முழுமையான தொகுதியை உள்ளடக்கி, ஜீவநதி பதிப்பகம் வெளியீடு செய்த, 'குப்பிழான் ஐ.சண்முகனின் சிறுகதைகள்' எனும் நூல் வெளியீட்டுவிழா, கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மூத்த எழுத்தாளரும், உளவியலாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் இந்த நூலை வெளியிட்டுவைத்தார். (ப-66)



மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேவைகள் இனங்காணப்பட்டதுடன் மாற்றுத்திறனாளிகள் பொருளாதாரரீதியில் முன்னேற்றம் அடைவதை இலக்காகக்கொண்டு, சுயதொழிலை மேற்கொள்கின்ற மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்குக் கடனடிப்படையில் நிதியுதவி வழங்குதல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ப-66)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தினர், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில், நெடுந்தீவுப் பயனாளிகளுக்குத் தென்னங்கன்றுகளை அண்மையில் வழங்கிவைத்தனர்.

பிரதேசசெயலர் திருமதி நிவேதிகா கேதீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பெருந்தோட்டங்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ப-9)






மட்டுவில் வடக்கு சிறிவேற்பிள்ளை சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட 7 மாதகால தையல் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. (எ-25-9)



# சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத் திருவிழா சேவையில் ஈடுபட்ட, இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் விசேட பிரிவினர், ஆலய நிர்வாகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை, சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ப-159)






சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கடற்கரைப் பகுதியை சிரமதானம் மூலம் அண்மையில் துப்புரவு செய்தனர். (ப-9)

கொழும்புத்துறைமேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவன்று பாடசாலை மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் அவர்களின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன. ஆலய பரிபாலனசபைச் செயலாளர் பரா.சாந்தகுமார் அவற்றை வழங்கினார். (ச-17)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரதேச மட்ட மகளிர் அமைப்பு கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலரின் வழிகாட்டலின்கீழ் பிரதேச ரீதியாகவும் கிராமரீதியாகவும் பெண்களின் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (ஒ-25-9)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ். போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவின் அனுசரணையில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ஒ-25-66)



யாழ்.மாவட்டத் தொழில் நிலையத்தில் தொழிலுக்காகப் பதிவுசெய்த பொருண்மியம் நலிவுற்ற குடும்பமொன்றைச் சேர்ந்த தொழில் தேடுநரான மாணவி ஒருவருக்கு, யாழ். எய்ட் நிறுவனத்தால் புதிய துவிச்சக்கரவண்டி ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் புதிய துவிச்சக்கரவண்டியைப் பயனாளிக்கு வழங்கிவைத்தார். (ஒ-25-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதுதான் தொடர்கதை!

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் எழுந்த பெரும் மக்கள் போராட்டங்கள் தற்காலிகத் தீர்வுகள் மூலம் தணிக்கப்பட்டிருந்த நிலையில், இப்போது நாட்டில் மெல்லமெல்ல போராட்டங்களும், பணிப்புறக்கணிப்புகளும் வெளிக்கிளம்ப ஆரம்பித்திருக்கின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கான காரணிகள் கண்டறியப்பட்டு அவற்றுக்குரிய தீர்வுகள் எட்டப்படாமையே இந்தப் போராட்டங்களும், பணிப்புறக்கணிப்புகளும் தொடர்கதையாவதற்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. பொருளாதார நெருக்கடி ஊடாக பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் நெருக்கடிகளுக்கான தீர்வைக் கண்டறிவதைக் காட்டிலும், மக்கள் மத்தியில் மதிப்பிழந்து போன தனது அரசியல் செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்புவதிலேயே அதிக அக்கறை காட்டியிருந்தார். மக்களின் எதிர்ப்புக் குரல்களை - கோரிக்கைகளை அதிகாரப் பலம் கொண்டு அடக்கிய ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் ஒரு மாயையான இயல்புநிலைமையைத் தோற்றுவித்தார். நாட்டின் வரலாற்றில் இல்லாதவாறு வெடித்த மக்கள் எழுச்சியால் அரண்டு போயிருந்த அரசியல்வாதிகளும், அரசியல்கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளுக்கு வேறுவழியின்றி ஆதரவளித்தன.

சர்வதேச நாணயநிதியக் கடன்திட்டம், வெளிநாட்டுக் கடன்கள் மூலம் அந்நியச் செலாவணிக் கையிருப்பைச் சற்று உயர்த்திக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், உள்நாட்டில் மக்கள் மீதான வரிவிதிப்பு, கட்டண உயர்வு என மக்கள் தலையில் ஏறி மிதித்து அரச வருமானத்தையும் ஈட்டிக்கொண்டது. ஆனால் நாட்டின் நிலைபேறான பொருளாதார உயர்வுக்குத் தேவையான உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சிகளையோ, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களையோ ரணில் தலைமையிலான அரசாங்கம் எடுக்க மறந்தது. அதன்விளைவு இன்னமும் நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலைமை, சாதாரண மக்களை சுட்டுப்பொசுக்கிக்கொண்டிருக்கின்றது.

தேர்தல் ஒன்றை நாடு எதிர்கொண்டிருக்கும் நிலையில், ஆளும் தரப்பின் பிரதான பேசுபொருளாக சர்வதேச நாணயநிதியத்தின் கடனுதவித் திட்டம் இருக்கின்றது. நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படுமானால் சர்வதேச நாணயநிதியத்தின் கடன் உதவிக்குப் பாதகம் ஏற்படும் என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் விதைத்து, வாக்குகளை அறுவடைசெய்யத் திட்டமிடுகின்றது ரணில் விக்கிரமசிங்க தரப்பு. ஆனால் சர்வதேச நாணயநிதியத்தின் கடன் உதவியால் நாட்டில் பொருளாதாரத்தை மீட்டுவிட முடியாது என்பதே உண்மை நிலைமை. சர்வதேச நாணயநிதியத்தால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் 25 வீதமானவை இன்னமும் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்படாத இந்த நிபந்தனைகள் ஒவ்வொரு மீளாய்விலும் புதுப்பிக்கப்படுகையில், இது நாட்டை இன்னுமோர் ஐந்து ஆண்டுகளில் சர்வதேச நாணய நிதியத்திடம் மீளக் கையேந்தும் நிலைமையை ஏற்படுத்தும் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

நாட்டில் போராட்டங்கள் தணியவேண்டுமானால் - மக்கள் தலையை அழுத்தும் வாழ்க்கைச் சுமை மறையவேண்டுமானால், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கான நிரந்தரத் தீர்வைக் கொண்ட திட்டங்கள் உள்நாட்டில் கட்டியெழுப்பப்பட வேண்டும். அவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படும்வரையில் போராட்டங்களும், பணிப்புறக்கணிப்புகளும் தொடரத்தான்போகின்றன - அவற்றால் சாதாரண மக்களே இடர்களை அனுபவிக்கவும் போகின்றனர். ஒரு சரியான தலைமை நாட்டுக்குக் கிடைக்கும்வரையில் இந்த நிலைமை தொடரத்தான் போகின்றது.




## மருத்துவமனைக்குள் அடாவடி; நீதி வழங்கக்கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குள் அண்மையில் அத்துமீறி உள்நுழைந்து தாதியர் மற்றும் காவலாளி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும் அடாவடியில் ஈடுபட்டோரை கைதுசெய்ய வலியுறுத்தியும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மருத்துவமனை சமூகத்தினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



கடந்த சனிக்கிழமை இரவு மருத்துவமனைக்குள் புகுந்த சுமார் 10 பேர் கொண்ட குழு தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அங்கு கடமையிலிருந்தோரை தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

குறித்த அடாவடியில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். மருத்துவமனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ச-100)

## 153 பொலிஸார் மீது இவ்வாண்டு தாக்குதல்

கொழும்பு, ஜூன் 12

இந்த ஆண்டின் கடந்த ஆறு மாதங்களில் ஒன்பது மாகாணங்களில் பணியாற்றும் 5 பொலிஸ் பரிசோதகர்கள், 13 உப பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளிட்ட 153 பொலிஸார் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 81 சார்ஜென்களும், 54 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் 143 பேர் உத்தியோகபூர்வமாக பொலிஸ் கடமைகளில் ஈடுபடும் போது தாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## உடைமையில் போதை மாத்திரை: மூவருக்கு விளக்கமறியல்

ஆனைக்கோட்டையில் போதைமாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்ட மூவர் நீதிமன்றதில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் ஆனைக்கோட்டையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் மற்றும் வாளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நிதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-26)

## விவசாயத்தில் நவீனம் பங்களாதேஷ் ஆதரவு

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துக்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உறுதியளித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் பதவிப் பிரமாண நிகழ்வுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

## கணினி கல்வியறிவு நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் கணினிக் கல்வியறிவு 39 வீதமாக அதிகரித்துள்ளது என்று சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 5 முதல் 69 வயதுக்கு இடைப்பட்ட ஐந்தில் இருவர் கணினி அறிவு பெற்றவர்களாக உள்ளனர்.

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டளவில், கணினி கல்வியறிவு 4.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

### நாளை

13.06.2024

வியாழக்கிழமை

வைகாசி - 31

சுபநேரம் : 07.22 - 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52

### நாளொரு நல்வார்த்தை

அமைதியான வாழ்க்கைக்கு இரண்டு விதிகள்:
தோல்வியில் மனச்சோர்வு ஒருபோதும் இதயத்துக்குச் செல்லக்கூடாது, வெற்றியில் ஈகோ ஒருபோதும் மூளைக்குச் செல்லக்கூடாது.

- அப்துல்கலாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாதம் உ/த பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 12

இந்த வருடத்துக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நவம்பர் மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சு நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையைச் செப்ரெம்பர் மாதம் நடத்த முடியும். பிள்ளைகளின் நேரத்தை வீணடிப்பதைத் தடுக்கப் பரீட்சை நிறைவடைந்தவுடன் உயர்தரக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்துப் பல்கலைக்கழக நுழைவை விரைவுபடுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-66)

## ஓமந்தைப் பகுதியில் 235 ஏக்கர் விடுவிப்பு

ஓமந்தை பனிக்கர் புளியங்குளத்தில் 235 ஏக்கர் காணி வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக குறித்த பகுதியைப் பார்வையிட்டு இந்தக் காணிகளை விடுவித்துள்ளனர். இதனால், அங்குள்ள குடும்பங்களுக்கு தலா ஒரு ஏக்கர் காணி வாழ்வாதார நடவடிக்கைக்காக வழங்கப்படும். (ம-110)



## காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இருந்து 75m தூரத்தில் வைரவர் கோயில் ஒழுங்கையில்
- யாழ் நகரத்தில் இருந்து 10 நிமிட நடைபாதை தூரத்தில்
- பண்ணை கடற்கரைக்கு மிக அருகாமையில்
- 5பரப்பும் 10 குளியும் கொண்ட வெறும் காணி விற்பனைக்கு உண்டு.
- ஹொட்டல்கள், நட்சத்திர வீடுகள் அமைப்பதற்கு உகந்த இடம்.
- மிகவும் அமைதியான சூழலில் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு:-
Whats app :- +44 793 276 2452
075 337 2876

(CS/55347) J-1

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராசதுரை சரூபன்

அன்னை மடியில் 19.09.1986
ஆண்டவன் அடியில் 25.05.2023

திதி: 12.06.2024

ஆண்டு ஒன்று ஆனதடா
மாநிலத்தில் நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு
உன் அப்பா அம்மா
சகோதரங்கள் மனைவி பிள்ளைகள்
அனைவரையும் தவிக்க விட்டு
இமைகளை மூடிவிட்டாய்
உன்னை எண்ணி தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்.
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எங்களுக்கு இல்லையடா
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கிறோம்
உன் போல உறவை எப்போது
நாம் காண்போம்!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குமார சுவாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 403 2769

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) மூளாய், சுழிபுரம்.
பதிவு இல :- J/82-04-04-1936

## வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிவித்தல்

இடம் :- கூட்டுறவு வைத்தியசாலை விரிவுரை மண்டபம்
காலம்:- 29.06.2024 சனிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி

இக் கூட்டத்திற்கு பொதுச்சபை அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்/செயலாளர்
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்.
மூளாய், சுழிபுரம்.
(cr.42631) N-1

## கண்ணீர் அஞ்சலி

### பிரம்மஸ்ரீ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்



அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ பி.ரகுராமக்குருக்கள் அவர்களின் பாசமிகு தந்தையார் பிரம்மஸ்ரீ இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் அவர்கள் இயற்கையெய்தினார் எனும் செய்தியறிந்து துயரடைந்தோம். அவரது பிரிவால் துன்புற்றிருக்கும் குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா அம்பாள் பாதத்தில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்
உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்

(CR 42633) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 - 06 - 1953
மறைவு 11 - 06 - 2024



### செல்வராசா சுப்பிரமணியம்

(மணி அண்ணை)

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சுப்பிரமணியம் நேற்று (11.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - மணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், சாந்தகுமார் மற்றும் சரஸ்வதி (கலா), தெட்சணாமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

125, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 567 0041
077 146 5015

(CS/55339) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
12.06.2024
புதன்கிழமை


புதிய விடயங்களின் பக்கம் நீங்கள் செல்லவில்லை என்றால் உங்களால் தொடர்ந்து இயங்க முடியாது.

- சத்யா நாதெள்ளா



நேர்கண்டவர்:
நத்தாஷா ஸ்டீபன்
யாழ். பல்கலைக்கழகம்

# ஏனைய திரைத்துறைகளின் தாக்கத்தில் அமிழ்கிறது இலங்கையின் திரைத்துறை





## இயக்குநர் ரொணி ஆதங்கம்

இலங்கைத் திரையுலகம் ஏனைய திரையுலகத்தின் தாக்கத்துக்கு ஆட்பட்டு வருவதால் இலங்கை சினிமாவுக்கு என்ற தனித்துவம் இல்லாமற் போகின்றது. இலங்கையின் எந்தப் பிரதேசத்தினுடைய வாழ்வியலை மையப்படுத்தி அப் படம் உருவாக்கப்படுகின்றதோ அதற்கு உண்மைத் தன்மையோடு அந்த வாழ்வியலுக்குரிய விடயங்களை நாம் மக்களிடம் கடத்தினாலே இலங்கை சினிமாவிற்கான தனித்துவம் கிடைத்துவிடும் என்றவாறாக வலியுறுத்தியிருக்கின்றார் ஈழத்து சினிமாவின் நடிகரும் இயக்குநருமான ரொணி.

கடந்த ஆண்டு இலங்கையில் மலையகத்தில் 'த ரூஸ் எண்ட்' எனும் திரைப்படமானது மக்களின் பேராதரவோடு வெளியாகி, மலையகத்திலும் தலைநகரிலும் திரையரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டு அனைத்து நாள்களும் அனைத்துக் காட்சிகளும் அரங்கம் நிறைந்த காட்சிகளாக மக்களின் பேராதரவைப் பெற்று மாபெரும் வெற்றித் திரைப்படமானது! மலையகம் சார்ந்து மலையகத்திலிருந்து வெளிவந்து முதல் முறையாக திரையரங்கில் வெளியான இந்தத் திரைப்படத்தினை இலங்கை சினிமாவினை, ஓர் வளர்ச்சி நிலைக்கு கொண்டுசெல்ல வேணவா கொண்டிருக்கும் இயக்குநரும் நடிகருமான ரொன்ஸ்டன் சிங்கராயர் எனும் ரொணியுடனான நேர்காணலே இது.

**கேள்வி : சினிமா உலகில் உங்கள் பயணத்தைத் தீர்மானிக்கவும், இதில் தொடரவும் உங்களைத் தூண்டியது எது?**

**பதில் :** சிறுவயதிலிருந்து இருந்த சினிமாவின் தாக்கமே என்னை திரையுலகுக்கு ஈர்த்தது. சினிமா பார்த்துத்தான் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். பொதுவாக வாழ்க்கை பற்றிய பல புரிதல்களை சினிமாவின் மூலமே கற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது. இதனால் ஏனையவர்களை விட சினிமா மீதான பற்று எனக்கு அதிகமாகவே இருந்தது. பாடசாலைக் கல்வி முடிவடைந்த பின்பு ஐடி துறையில் பயணித்தேன். ஆனால் கணினிகளுடன் வாழும் வாழ்க்கையில் எனக்கு உடன்பாடில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் சில சிறு காணொலிகளை செம்மையாக்கம் செய்வது, பாடல்களை செய்வது போன்ற விடயங்களைத்தான் மேற்கொண்டேன். அதன் மீதான ஆர்வம் அதிகரிக்கத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டு என்னுடைய முதலாவது குறுந்திரைப்படத்தை உருவாக்கினேன். அதன்மூலம் கிடைத்த திருப்தி வேறெதிலும் எனக்கு கிடைத்ததில்லை. ஏனைய எல்லா வேலைகளும் தொடர்ச்சியான போக்கிலேயே காணப்படுகின்றன. ஆனால் சினிமா எனும்போது அதில் புதுவிதமான சிந்தனைகளையும் புது விதமான படைப்புகளையும் உருவாக்க வேண்டியிருக்கிறது. ஒன்றைப்போல் மற்றொரு படைப்பு இருப்பதற்கான வாய்ப்பில்லை. ஒவ்வொரு புதிய படைப்புகளும் முழுமையாகவே ஒரு புதிய பயணமாகவே இருக்கும். இவ்வாறான ஒரு வேலை தரும் போதை வேறெதிலும் கிடைக்கவில்லை.

**கேள்வி : இலங்கையில் ஒரு நடிகராகவும் இயக்குநராகவும் இருப்பதில் மிகவும் சவாலான மற்றும் பயனளிக்கும் அம்சங்கள் பற்றி...?**

பதில் : இலங்கையைப் பொறுத்தவரையில் சினிமாத்துறையில் பயணிப்பதென்பதே ஒரு சவாலாகத்தான் இருக்கின்றது. இலங்கையில் தமிழில் ஒரு சரியான சினிமாத்துறை இயங்கவில்லை. அதே வேளை இலங்கையில் 10 வீதம் கூட எமக்கான அங்கீகாரமும் எமக்கான வாய்ப்புகளும் கிடைப்பதில்லை. ஒரு படைப்பை ஆரம்பித்து முழுதாக அவற்றின் அனைத்து வேலைகளையும் முடித்து அதை மக்களிடத்தில் கொண்டு செல்லும் வரை அனைத்துமே சவாலான விடயங்கள்தான்.

இவ்வாறு சவால்கள் அதிகமாக இருந்தாலும் கூட அதில் ஒரு சில பயன்களும் இருக்கிறது. உதாரணமாக, தென்னிந்தியா போன்ற திரையுலகை ஒப்பிட்டால் அங்கிருக்கும் அளவுக்கு நிறைய போட்டிகளோ அதற்குள் இருக்கும் ஏனைய நிபந்தனைகளோ இங்கில்லை. இலங்கையில் நாம் சுதந்திரமாக செயற்பட முடியும். அத்தோடு எந்த வரையறைக்குள்ளும் இருக்கவேண்டியதில்லை. ஒரு கட்டமைப்புக்குள்ளோ அல்லது வணிக நோக்கத்திற்குள்ளோ இருந்து ஒரு படைப்பை உருவாக்கவேண்டிய கட்டாயம் இல்லை.

**கேள்வி : நீங்கள் நடித்த மறக்கமுடியாத பாத்திரங்கள் மற்றும் அவை உங்களுக்குச் சிறப்பானதாக அல்லது சவாலாக அமைந்தவை பற்றி...?**

**பதில் :** நான் நடித்ததில் மறக்கமுடியாத ஒரு கதாபாத்திரம் என்றால் இறுதியாக நான் தயாரித்து இயக்கிய த ரூஸ் எண்ட் திரைப்படத்தில் வரும் 'காளி' என்ற கதாபாத்திரம் தான். இதற்கு முன் ஏற்ற கதாபாத்திரங்கள் எல்லாமே நான் வழமையாக இருப்பது போலவே இருந்துள்ளன. அந்தக் கதாபாத்திரங்களின் வெளித்தோற்றமாக இருந்தாலும் சரி குணவியல்புகளாக இருந்தாலும் சரி பெரிதளவில் வித்தியாசம் என ஒன்றுமில்லை. ஆனால் இந்த 'காளி' எனும் கதாபாத்திரம் நானே எழுதி உருவாக்கிய கதாபாத்திரமாக இருந்தாலும் நானே அதை நடிக்கும் போது கடினமாகத்தான் இருந்தது. அது நான் வாழாத ஒரு வாழ்க்கை. எனக்குள் இல்லாத பல உணர்வுகள், அந்த கதாபாத்திரம் செய்யும் வேலைகள், அதன் நடத்தைகள் எதுவுமே ரொணி என்கிற மனிதனுக்கு இல்லாத விடயங்கள். சாரம் கட்டுதல், புகைபிடித்தல், கொலை செய்தல் மற்றும் ஏனைய உடல் சைகைகள் போன்ற பல விடயங்கள் என்னுடைய நிஜ வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. இவ்வாறான ஒரு கதாபாத்திரமாக என்னை நான் மாற்றிக் கொள்ளும்போது அது மிகவும் சவாலாக இருந்தது. அது சிறப்பான கதாபாத்திரமாகவும் அமைந்தது.

ஏனென்றால் முதல் தடவையாக எனது முகம் ஒரு பெரிய திரையில் வெளிவந்ததென்றால் அந்தக் கதாபாத்திரம் தான். எதிர்காலத்தில் இனி எத்தனை கதாபாத்திரங்களில் நான் நடித்தாலும் முதல் தடவை மக்கள் பார்த்ததும், கொண்டாடி தீர்த்ததும் இந்தக் கதாபாத்திரத்தை தான். எனவே என்னுடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு கதாபாத்திரம் என்றால் அது 'காளி' தான்.

**கேள்வி : ஒரு புதிய பாத்திரத்துக்கு நீங்கள் எவ்வாறு தயார் செய்கிறீர்கள், ஒரு பாத்திரத்துக்கு உயிர் கொடுக்க என்ன நுட்பங்கள் அல்லது முறைகளைப் பயன்படுத்துகிறீர்கள்?**

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# இலுப்பையடி வீரகத்தி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்!

■ நந்தன்

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த வயல்கள் மத்தியில் அமைந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா, இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கின்றது. நீர்வளம்,விவசாயவளம் என்பன நிறைந்து காணப்படும் இப்புண்ணிய பூமியில், சித்தர்கள் நடமாடிய இந்த மண்ணில் இலுப்பை மரங்கள் சூழ்ந்து காணப்படும் இந்த ஆலயம் மிகவும் நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தொன்றாகும்.

கடந்த பல வருடங்களாகவே ஆலயத்தின் நித்திய பூசைகள் மற்றும் ஏனைய உற்சவங்கள் எல்லாம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மார்கழி மாதத்தில் நடைபெறும் பிள்ளையார் கதை நாள் தவறாமல் இங்கு முன்னெடுக்கப் படுவதுண்டு. அதனைவிட ஆவணி மாதத்தில் நடைபெறும் விநாயகப் பெருமானின் ஆவணி சதுர்த்தி உற்சவமும் வெகுசிறப்பாக நடைபெற்று வருவது வழக்கம்.

ஆலயத்துக்கென அழகிய சிற்பத்தேர் ஒன்றும் அமைக்கப்பட்டு கடந்த வருடத்தில் வெள்ளோட்டம் இடம்பெற்றது. ஆலயத்தின் திருப்பணி வேலைகளும் ஊர்மக்களின் உதவியுடன் சிறப்பாகவே இடம்பெற்று வருகின்றன. இதன் நீட்சியாக ஆலயத்தின் இன்று திருவிழா ஆரம்பமாகி 12 தினங்கள் இடம்பெறவுள்ளன.



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# ஏனைய திரைத்துறைகளின்...

பதில் : எல்லாக் கதாபாத்திரத்துக்குமே ஓர் அடிப்படைப் பயிற்சி வேண்டும் என நினைக்கின்றேன். அதுபோல அந்தக் கதாபாத்திரம் பற்றிய முழுப் புரிதல் எமக்கு இருத்தல்வேண்டும். குறிப்பிட்ட அந்த காட்சி மற்றும் குறிப்பிட்ட அந்த வசனம் என்பதைத் தாண்டி அக்கதாபாத்திரம் அந்தத் திரைப்படத்தில் எந்த மாதிரியான பாத்திரத்தை ஏற்கிறது என்பது தொடர்பில் முழுமையான புரிதல் இருத்தல்வேண்டும். அதைத் தாண்டி அந்த கதைக்கு அப்பாற்பட்டும் அந்தக் கதாபாத்திரம் எந்த வாழ்வியலில் இருந்து வந்திருக்கிறது. அதன் இறந்த காலத்தில் நடந்த விடயங்கள் என்ன? ஒவ்வொரு உணர்வுகளுக்கும் அந்த கதாபாத்திரம் எவ்வாறான எதிர்வினைகளை வழங்கும்? என்பதனை ஆரம்பத்திலேயே மனதிற்குள் சரி செய்து கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் அந்தக் கதா பாத்திரமாகப் பயணம் செய்யமுடியும். அந்தக் கதா பாத்திரத்துக்கான எல்லையை நாமே உருவாக்கிக் கொள்ளவேண்டும். அந்தக் கதாபாத்திரத்தினை தனித்துவப்படுத்திக் காட்டுவதற்கு நாம் சில விடயங்களை எம்மில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கதாபாத்திரத்தின் உண்மைத் தன்மையில் நடிப்பையும் தாண்டி குரல் பண்பேற்றமும் முக்கியமான பங்காற்றும்.

கேள்வி : **இலங்கை சினிமாவை வேறுபடுத்துவது எது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அதன் வளர்ச்சிக்கு நீங்கள் என்ன பங்களிப்பு செய்வீர்கள் என்று நம்புகிறீர்கள்?**

பதில் : இலங்கைத் திரையுலகம் ஏனைய திரையுலகத்தின் தாக்கத்துக்கு ஆட்பட்டு வருவதால் இலங்கை சினிமாவுக்கு என்ற தனித்துவம் இல்லாமற் போகின்றது. இலங்கையின் எந்தப் பிரதேசத்தினுடைய வாழ்வியலை மையப்படுத்தி படம் உருவாக்கப்படுகின்றதோ அதற்கு உண்மைத்தன்மையோடு அந்த வாழ்வியலுக்குரிய விடயங்களை நாம் மக்களிடம் கடத்தினாலே இலங்கை சினிமாவுக்கான தனித்துவம் கிடைத்துவிடும். இப்போது எப்படி மலையாள திரைப்படங்களுக்கென ஒரு தனித்துவம் வந்திருக்கின்றதோ அதனைப் போல இலங்கை சினிமாவிற்கும் தனித்தன்மை வந்துவிடும்.

இவ்வாறான மாற்றங்களுக்காக தான் நான் ஒரு விதை போட்டிருக்கின்றேன். அதுதான் நான் இறுதியாக எடுத்த த ரூஸ் என்ட் திரைப்படம். தரத்தின் அடிப்படையில் இந்திய சினிமாவை உதாரணம் காட்டி மக்கள் வாழ்த்தியிருந்தாலும் முழுமையாக ஓர் இலங்கைப் படமாக அது இருந்தது என்பதே திரைப்படம் பார்த்த அனைத்து மக்களின் கருத்தாக இருந்தது! என்றாவது இலங்கை சினிமாவை சர்வதேச ரீதியில் கொண்டு செல்ல நான் தொடர்ந்து கடினமாக உழைத்துக் கொண்டிருப்பேன். இலங்கை சினிமா வளர்ச்சியில் என்னுடைய பங்கும் நிச்சயம் இருக்கும் என நம்புகின்றேன்.

கேள்வி : **வரவிருக்கும் திட்டங்கள் அல்லது திரைப் படங்கள் தொடர்பில் பகிர முடியுமா?**

பதில் : இதுவரையிலும் எந்த ஓர் திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை! எனது த ரூஸ் என்ற திரைப்படத்துக்கு மக்கள் தந்த மாபெரும் வரவேற்பும் வெற்றியும் என்னை இன்னும் அதிக பொறுப்புடைய படைப்பாளியாக மாற்றியுள்ளது. தோல்விகளைவிட வெற்றியின் போது அதிக நிதானம் தேவை என நினைக்கின்றேன். அடுத்த திரைப்படங்களுக்கான திரைக்கதைகள் எழுதி வருகின்றேன்.

கேள்வி : **இலங்கைத் திரையுலகில் சமூக வலைத் தளங்களின் தாக்கம் தொடர்பில்...?**

**பதில் :** தற்காலங்களில் அனைத்துத் துறைகளுக்குமே சமூக வலைத்தளங்களின் தேவை அதிகம், அவ்வாறிருக்க சினிமாவுக்கு சமூக வலைத்தளங்களின் தாக்கம் அத்தியாவசியமானது. அவை இன்றி நாம் எமது படைப்பை அல்லது படைப்பாளி பற்றிய விடயங்களை மக்களிடம் கொண்டு செல்லமுடியாத நிலை உள்ளது.

சமூக வலைத்தளங்களில் தான் நாம் செய்யும் வேலைகளுக்கான விளம்பரங்கள் தொடங்கி எம்மை பற்றி நாம் இந்த உலகத்துக்கு எவ்வாறு காட்ட விரும்புகின்றோம் என்பது வரை எல்லாமே சமூக ஊடகங்களின் வழியாகவே இருக்கின்றது. என்னுடைய வாழ்க்கையிலும் சமூக வலைத்தளங்களின் மூலம் வந்த நண்பர்கள் தான் ஆரம்பம் முதல் என்னை பாராட்டி, ஊக்கப்படுத்தி பின்னர் ஆதரவாளர்களாக மாறி, இன்று ரசிகர்களாக மாறி இருக்கின்றனர். எனது சினிமா பயணத்தில் சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்து இருக்கின்றது! ஆனால் அது மட்டுமே திரையுலக வாழ்க்கைக்கு பயனளிக்காது!

# சிதிலமாக்கப்படும் சித்திரங்கள்!



ஹங்கேரியின் முதல் பெண் அதிபராக 2022ஆம் ஆண்டில் பதவியேற்ற கதலின் நோவேக், தனக்கு இருந்த மன்னிக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தண்டனைக் குற்றவாளிகள் சிலரை விடுதலைசெய்தார். அவர்களில், சிறார் பாலியல் வன்கொடுமை தொடர்பாக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய ஒரு நபரும் அடக்கம்.

இந்தச்செய்தி வெளியானதும், பொதுச்சமூகம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் குதித்தனர். இதனையடுத்து அதிபர் கதலினும், அந்தப் பட்டியலை அங்கீகரித்த அன்றைய சட்ட அமைச்சர் யூடித் வார்காவும் பதவிவிலகினர். குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை ஐரோப்பிய சமூகம் எவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொள்கிறது என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

## உலகளாவிய பிரச்சினை

உலகெங்கும் வாழும் சிறார்களில் 18 வீதமான பெண் குழந்தைகளும், 8 வீதமான ஆண் குழந்தைகளும் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. சிறார் மீதான பாலியல் வன்கொடுமை என்பது அந்தக் குழந்தைகளின் உடல், மன நலன் சார்ந்த ஒன்று மட்டுமல்ல. அது சமூகவியல் பிரச்சினையும்கூட. பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகும் குழந்தைகள் வாழ்நாள் முழுக்க மன அழுத்தத்துடனும், உடல்நலம் சார்ந்த சிக்கல்களோடும் வாழ நேர்கிறது. இவற்றின் பலனாக வெறுப்பும், குற்றவுணர்வும், இயலாமையும் மேலோங்க, அவர்களில் சிலர் குற்றச்செயல்களில் ஈடுபடத் தொடங்குகிறார்கள். இது ஒரு சங்கிலித்தொடர்போல் நீடிக்கும்போது சமூகச் சமநிலை தொடர்பாதிப்புக்கு உள்ளாகிறது. குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியே செல்லாதபோது பிறரால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளான தாக்குதலுக்கு உள்ளாதல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் ஆகியவற்றுக்கான சாத்தியங்கள் குறைகின்றன என்பது இதன்மூலம் தெரியவருகிறது.

அதேநேரம், குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோரில் பெரும்பான்மையானோர் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு உறவினராகவோ, நன்கு அறிமுகமானவராகவோதான் இருப்பார்கள் என்பதால், குழந்தைகள் வீட்டுக்குள் முடங்கிக்கிடந்த சூழலிலும் அவர்கள்மீது நிகழ்ந்த பாலியல் தாக்குதல்களின் எண்ணிக்கை குறையவில்லை. அதாவது, நம் குழந்தைகள் அவரவர் வீடுகளில்கூடப் பாதுகாப்பாக இல்லை. ஒப்பீட்டளவில் ஆண் குழந்தைகளைவிட, பெண் குழந்தைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகக் குற்றக்கணக்கீட்டு அறிக்கை தெரிவிக்கிறது. ஆண் குழந்தைகளும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாவார்கள், குற்றவாளிகள் பெண்களாக இருக்கக்கூடும் என்பதையும் வியப்பாகக் காணும் நிலையே இன்றுள்ளது.

## குழந்தைகளைக் காப்போம்

முதற்கட்டமாக இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் தனிநபர் சார்ந்த தகவல்கள், அவர்களுடைய சமூக, பொருளாதாரப் பின்னணி, குற்றம் நிகழ்ந்த இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களைச் சேகரிப்பதன் வழியே இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கான வழிமுறைகளை நம்மால் உருவாக்க முடியும். தரவுகளையும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் இணைத்து இத்தகைய குற்றங்களை முன்கூட்டியே துல்லியமாகக் கணிக்கவும் இயலும். அது சார்ந்த ஆய்வுகளை முன்னெடுப்பது இன்றைய காலத்தில் கட்டாயம். ஆனால், அதற்கான தரவுக் கட்டமைப்போ, ஒருங்கிணைப்போ, ஒத்துழைக்கும் மனநிலையோ அரசு இயந்திரத்திடம் இல்லை.

குழந்தைகளுக்கு எதிராகக் குற்றமிழைப்பவர்கள், அவர்களுக்குத் துணைநிற்பவர்கள் அனைவருமே சமூகத்துக்கு எதிரான பிறழ் மனநிலை கொண்டவர்கள்;. அது மட்டுமல்ல, அவர்கள் அறம் பிறழ்ந்தவர்களும்கூட. ஜனநாயக அமைப்பில் அறத்தைக் கூற்றாக்கி, நீதியை நிலைநாட்டுவது மக்களாகிய நம் கைகளில்தான் உள்ளது. [illegible] குழந்தைகளைக் காப்பதுதான் நம் தலையாய கடமை. அதற்கான முயற்சிகளை இன்றே தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதக்கும் குப்பைமேடுகளும் புழுங்கும் மனித மனங்களும்





■ தாசன்

உலகில் என்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி உருப்பெற்றதோ அன்று முதல் இயற்கைக்கும் மனிதனுக்கும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தல் உருவாகியது. இன்றைய மனிதர்களுக்கு தாம் வாழும் சூழல் மீது எள்ளளவும் அக்கறை இல்லை. அதேவேளை அழிவடையும் இயற்கை வளங்களைப் பேணும் மனோநிலையும் அறவேகிடையாது. இதனால் புவிச் சூழல் அளவுகடந்த மாசு நிலையை எய்தியுள்ளது. கற்கால மனிதன் சூழலுடன் ஒன்றி சூழலுக்கு நேயமாக வாழ்ந்தான். தற்கால மனிதன் விஞ்ஞான நவீனத்துவத்தைப் புகுத்தி சூழலுக்கு விரோதமான மாசு நிலையை ஏற்படுத்தியுள்ளான். விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்று முழு உலகையும் குப்பை மேடாக்கியுள்ளது என்பதே உண்மை.

அண்மைக் காலமாக வளர்ச்சியுற்ற நாடுகள் தமது இரசாயனக்கழிவுகள், இலத்திரனியல்கழிவுகள், அணுக் கழிவுகள், எண்ணெய்க்கழிவுகள், மருத்துவக் கழிவுகள் மற்றும் பிளாஸ்ரிக்கழிவுகள் யாவற்றையும் பெரிய கப்பல்களின் கொள்கலன்களில் நிரப்பி மூன்றாம் மண்டல நாடுகளின் கடல்களினுள் கொட்டுவதற்கு அலைந்த வண்ணம் உள்ளன. வல்லாதிக்க நாடுகள் வறிய நாடுகளின் வறுமை மற்றும் வங்குரோத்து நிலையைப் பயன்படுத்தி தமது நாட்டுக் கழிவுகளை அகற்றுவதற்கு அந்த நாடுகளையும் அவற்றின் கடற்பரப்பையும் பயன்படுத்திக்கொள்கின்றன. இதனால் மூன்றாம் மண்டல வறிய நாடுகளின் நீர்ப்பரப்பு, நிலப்பரப்பு, வளிமண்டலம் என்பன மீளமுடியாத சூழல் மாசடைவுக்குட்படுகின்றன. மேலும் வானிலை மாற்றம், காலநிலைச் சிதைவுக்கு உட்படுகின்றன. இந்த நாடுகளின் மக்கள் சுவாச நோய்கள், சருமநோய்கள், புற்றுநோய் போன்ற சவால்கள் நிறைந்த வாழ்வுக்கு உட்படுகின்றார்கள்.

மேலும் நவீன அறிவியலின் உச்ச நிலையை அடைவதற்காக வளர்ந்த நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு புதிய உற்பத்திகள், கண்டுபிடிப்புகள், ஆய்வு நடவடிக்கையில் ஈடுபடுகின்றன. நவீன யுகத்திலுள்ள மனிதன் 'புதியன புகுத்தி பழையன களைவது' சரியான ஒன்றுதான். ஆனால் அவை புதிய மனித தேவைகளை உருவாக்குவதாகவோ அல்லது அந்தத் தேவைகளூடாக ஆசைகளைத் தூண்டுவதாக அமையக்கூடாது. ஆதி மனிதன் இரண்டு கல்லை உரசி தீயை உருவாக்கி உணவை நெருப்பில் வேகவைத்து உண்டமையானது மனித வாழ்வில் ஏற்பட்ட ஒரு படிமுறை வளர்ச்சியாகும். நவீன மனிதன் எரிவாயு அடுப்பையும் மின் அடுப்பையும் உபயோகித்து உணவு சமைப்பது சூழல் மாசு, கனிமவளத்தேய்வு உட்பட பலவித நோய்களையும் உருவாக்குகின்றது. இவை ஒரு கட்டத்தில் பழுதடைந்து செயலற்றுப்போகும் போது, அழிவடைய முடியாத இலத்திரனியல் கழிவுகள், இரசாயனக்கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகளாக அவை மாற்றம் பெறுகின்றன.

நகர உருவாக்கமும், இயந்திரத் தொழிற்சாலைகளின் வருகையும் உலகச் சூழலை புரட்டிப்போட்ட சுனாமி எனக் கூறலாம். எமது நாட்டைப் பொறுத்தவரை சூழலை மாசடையவைப்பதில் முக்கியமான பங்குவகிப்பவை மளிகைக் கடைகளில் பொருள்களை பொதியிட்டு வழங்கப்படும் பொலித்தீன் பைகளும் பிளாஸ்ரிக்கும்தான். தவிர கொண்டாட்டங்கள் மற்றும் மரண ஊர்வலத்தில் பயன்படுத்தப்படும் 'கந்தக வெடிக்கோர்வைகள்' போன்றவையும் சூழலை மாசுபடுத்துகின்றன. கைபேசிகள், கணினிகள், நவீன தொலைக்காட்சிகள், மின்னியல் சாதனங்கள், ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள், மோட்டார் வாகனக் கழிவுகள் போன்றவற்றாலும் எமது பிரதேசத்தில் கழிவுகள் மிதக்கின்றன. இதைவிட

> நகர உருவாக்கமும், இயந்திரத் தொழிற்சாலைகளின் வருகையும் உலகச் சூழலை புரட்டிப்போட்ட சுனாமி எனக் கூறலாம். எமது நாட்டைப் பொறுத்தவரை சூழலை மாசடைய வைப்பதில் முக்கியமான பங்குவகிப்பவை மளிகைக்கடைகளில் பொருள்களை பொதியிட்டு வழங்கப்படும் பொலித்தீன் பைகளும் பிளாஸ்ரிக்கும்தான்.

உயிர்ப் பல்லினத் தன்மையை அழிக்கும் அரக்கனாக பிரம்மாண்டமான தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ளன. இவை உடல், உள நலன்களுக்கு கேடு விளைவிக்கின்றன. எலும்பு நோய்கள், நரம்பு மண்டல நோய்கள், கண்தொடர்பான நோய்கள் என பலதரப்பட்ட நோய்களின் கோரத்தோற்றுவாயாக இவை உள்ளன. அத்தோடு இணைய இணைப்பு அதிகரிப்பதால் குடும்ப உறவுகள் சீர்குலைகின்றன. இளையோர்கள் தனிமைப்படுகிறார்கள்.

இதனால் வன்முறையாளர்களாக உருவாகின்றனர். தொடுதிரைக் கைபேசிகளின் பாவனை அதிகரிப்பதால் தூரத்திலுள்ள சகோதர உறவுகள் சிதைவடைகின்றன. மாணவர்கள் முகநூலில் மூழ்குவதால் பாடநூல்களைக் கோட்டை விடுகிறார்கள். இவர்கள் நீரிழிவு, கொலஸ்ரோல், உடற்பருமன் போன்ற தொற்றாநோய்களுக்கும் ஆளாகின்றனர். தொலைத் தொடர்புக் கோபுரங்களின் பாவனை அதிகரிப்பதால் நாடளவில் இவை இலத்திரனியல் கழிவுகளாகத்தேங்குகின்றன.

எனவே இறுக்கமான சட்டங்களூடாக மக்களை அறிவுறுத்தி எச்சரிப்பதன் மூலமே சூழல் மாசடைவைக் கட்டுப்படுத்தலாம். விளம்பரப் பதாகைகள், தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்கான அனுமதிகளை உரிய அரச நிறுவனங்கள் நிறுத்த வேண்டும். இதன்மூலம் இளையோர் சுகநலத்துடன் வாழ வழிவகுப்பதோடு உயிர்ப் பல்லினத் தன்மையும் பாதுகாக்கப்படும். பாடசாலை மாணவர்களிடையே சூழல் மாசடைவு பற்றி விழிப்புணர்வு வலுப்பெறவேண்டும். நோயற்ற வாழ்வு, சுத்தமான சூழல் தொடர்பான கருத்தூட்டலை கிராமங்கள்தோறும் மேற்கொள்ளவேண்டும். இவற்றின் மூலமே ஆரோக்கியமான வாழ்வை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கலாம். ■

## எதிர்காலம் பற்றிய குறிப்பு

கவிஞர் வேல். லவன்

பாலைவன சுடு மணலில்
ஊரும் பாம்புகள் இனி
எனது வீட்டின்
செல்லப்பிராணியாகலாம்.


மடல் பிழந்து
வறண்ட மதுவை சொரியும்
பேரீச்சை மரங்கள்
நிழல் மரங்களாகலாம்.

பட்டிப் பொங்கல் விட்டொழிந்து
ஒட்டகப் பொங்கல்
தேசிய பண்டிகையாகலாம்.

உஷ்ண மணல்வெளியில்
உருண்டு விளையாடப்
பழகும் குழந்தைக்கு
ஒட்டகப்பால் பானமாகவும்
கள்ளிப்பால் ஒத்தடமாகவும்
ஆகலாம்.

இதுதான் நம்
எதிர்காலம் பற்றிய குறிப்பு.

வாழிய
நமோ நமோ மாதா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாகிஸ்தான் இலகுவெற்றி

**கனடாவுடனான நேற்றைய ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றியைப்பெற்றுக்கொண்டது.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, கனடாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அந்த அணி 7 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களைப்பெற்றது. அந்த அணி சார்பில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஜோன்சன் 44 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் மொஹமட் ஆமீர் 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 17.3 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. மொஹமட் ரிஸ்வான் 53 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். டிலோன் ஹெய்லிகர் பந்து வீச்சில் 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆமீர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ-5)

# இலங்கைத் தீவுக்குள் தீர்வு இல்லை பொதுவேட்பாளர் உணர்த்தும் செய்தி

## சுமந்திரனை கடுமையாக சாடுகிறார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

தமிழ்ப் பொதுவேட்பாளரை தமிழ் மக்கள் ஆதரிப்பதன் ஊடாக, இலங்கைத் தீவிலே ஜனாதிபதியாக வரும் ஒருவரை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றார்கள், இலங்கைக்குள் தீர்வு இல்லை என்பதையும் அழுத்தம்திருத்தமாக முன்வைக்கின்றார்கள் என்ற கருத்து வெளிப்படும் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை. அவர்களுக்கு மக்கள் ஆணை கொடுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். அது தவறானது. சுய நிர்ணய உரிமை என்பது குடிமக்களுக்கு உரிய உரிமையாக காணப்படுகிறது. அந்த மக்கள்தான், தங்களுக்கு என்ன வேண்டும் என்பதைத்தீர்மானிக்க வேண்டும். கட்சியினுடைய தலைவர்களோ கட்சியினுடைய பிரதிநிதிகளோ அதனைத் தீர்மானிப்பவர்கள் அல்ல. முதலில் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சுயநிர்ணய உரிமை, இறைமை என்று கூறிவிட்டு அதனை சமஷ்டியுடன் ஒப்பிட முடியாது. அது பகிரப்பட்ட இறைமையாகும். சுய நிர்ணய உரிமையை பகிர்வது என்ற அடிப்படையில் இந்த விடயங்களைச் சாதிக்கமுடியாது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக, பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் தோற்றால் மிகப்பெரிய பலவீனம் ஏற்படும் எனக் கூறுகின்றார்கள். இது ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பு அல்ல. பொதுமக்கள் வாக்கெடுப்பு என்பது சர்வதேச சமூகத்தால் முன்னெடுக்கப்படும். பொதுவேட்பாளர் வாக்கெடுப்புத் தொடர்பாக நீங்கள் தற்பொழுது கவலைப்படத் தேவையில்லை - என்றார். (ஒ-125)



பிரதேச முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விற்பனைச் சந்தை நிகழ்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (பு-66)


## மரண அறிவித்தல்

பிறப்பு 31 . 03 . 1952



இறப்பு 11 . 06 . 2024

**அமரர் இராசரத்தினம் சட்டநாதன்**
இளைப்பாறிய ப. நோ. கூ. ச. முகாமையாளர்.

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சட்டநாதன் அவர்கள் (11.06.2024) செவ்வாய்க்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் துவாரகன், மதுரா, தரண்யா, ஆகியோரின் தந்தையும் பத்மாவதி, தில்லைநாதன் சத்தியநாதன் ஆகியோரின் சகோதரனும் கோபிகிருஷ்ணா, கலாயினி ஆகியோரின் மாமனாரும், ஆத்மிகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2024) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சாத்தாகலட்டி
அளவெட்டி வடக்கு
அளவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 731) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துடன் பேச்சு நடத்தும் மூவர்

கொழும்பு, ஜூன் 12

நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, தயாசிறி ஜயசேகர மற்றும் ரொஷான் ரணசிங்க தலைமையிலான அரசியல் குழுக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தேர்தல் கூட்டணியை அமைப்பதற்கான பேச்சுகளை நடத்தி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதுடன், பின்னர், அதிலிருந்து விலகி எதிரணியாக செயற்பட்டு வருகின்றனர். (எ-இ)


## பெயர் மாற்றம்

இல 97. ஹிஜ்ராபுரம் மன்னார் வீதி வவுனியாவில் வசிக்கும் **நெயினா முகம்மது முகம்மது ஷாபிற்** ஆகிய நான் எனது பெயரை **நெயினா முகம்மது சாபிர்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **நெயினா முகம்மது சாபிர்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/28414) J-1 **நெயினா முகம்மது சாபிர்**



## ஆண்டு விழா

மாற்றுத்திறனாளிகளின் சமூகவள கருவி நிலையத்தின் 11ஆவது ஆண்டு விழா, கருவி நிறுவனத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக பிரதேச செயலாளர் ச.சிவசிறி, புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)


## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 01 . 1936



இறப்பு 11 . 06 . 2024

**அருட்தந்தை பேதுரு பறுனாந்து பிலிப், அ.ம.தி**

**(Fr.P.P.Philip, OMI)**

அவர்கள் 11.06.2024 அன்று காலை அமல உற்பவ இல்லத்தில் இறைபதம் அடைந்தார்.


அவரது பூதவுடலானது இன்று (12.06.2024) பிற்பகல் 12.30 மணிவரை சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் அமைந்துள்ள புனித டீ மசனெட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. பின்னர் யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பிற்பகல் 2 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமலமரித்தியாகிகள்
யாழ். மாகாணம்.

(cs 55343) (N-1)



## 6ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.09.1947 மறைவு 20.05.2018

அமரர்

**சின்னத்தம்பி பொன்னம்பலம்**

(மகாலிங்கம் - கார் உரிமையாளர்)

திதி : பூர்வபக்க ஷஷ்டி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச்சென்று
ஆறாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/55337) J-1



### அன்புத் தெய்வங்களின் நினைவலைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**காராளர் நவரத்தினம்**

திதி: வளர்பிறை சஷ்டி

மலர்வு 13.12.1946 உதிர்வு 25.05.2023



**நவரத்தினம் லோகேஸ்வரி**

திதி: வளர்பிறை சப்தமி

மலர்வு 07.03.1951 உதிர்வு 27.01.2023

### எங்கள் வரம்

அப்பா!

சொல்லிப் புரிய வைக்க முடியா சிகரம் நீங்கள்.
லோகேஸ்வரியின் நவ - ரத்தினம் நீங்கள் - அப்பா.
நாங்கள் நினைத்ததை கூட வாங்கி தந்து அழகு
- பார்த்த அப்பா நீங்கள்.
நடை பயில ஆரம்பித்த காலம் முதல் இப்ப வரைக்கும்.
குறை தெரியா பிள்ளைகள் நாங்கள்.
நீங்கள் இல்லாத வெறுமை என்றும் மறையாது.
ஐம்பது ஆண்டு வாழ்ந்த திருமண வாழக்கையை.
கொண்டாடும் நேரத்தில் சொர்க்கத்தில் சேர்ந்தீர்கள்
- இருவரும்.
ஓராண்டு கடந்தாலும் மனதில் அழியாத ஓவியமாய்.
உள்ளது உங்கள் இருவரின் முகம் - அப்பா அம்மா.
தொலைவறியா தூரம் நீங்கள் இருவரும்.
அருகினில் பார்க்கச் சிறு பிள்ளையாய் ஏங்குகிறது
- எங்கள் மனம்.
உங்கள் அரவணைப்பு எங்கள் காலத்தின் வரம்.
உங்கள் பிரிவு காலத்தில் ஆற்றமுடியா துயர்.
நீங்கள் கற்று தந்த வாழ்க்கைப்பாதையில்.
உங்கள் நினைவுகளுடன் உங்களின் வாழ்க்கை.
சாட்சிகளாய் நாங்கள் பயணிக்கிறோம்.

### எங்கள் வரம்

அம்மா!

என்றும் நினைவில் நெகிழும் வார்த்தை.
ஆண்டு ஒன்று கடந்து விட்டது உங்களைப்
- பிரிந்து.
வாழ்வில் எல்லாவற்றையும் சொல்லி ஆறுதல்
- அடைய.
இருந்த ஆத்மா நீங்கள் அம்மா.
திருமணம் ஆனதிலிருந்து அப்பாவை.
காதலித்ததினாலோ என்னவோ அவரையும்.
நான்கு மாதத்தில் காரணம் சொல்லாமல்.
உங்களுடன் அழைத்துச் சென்றுவிட்டீர்கள்
- ஏனோ.

உங்கள் இருவரின் ஆத்மாக்கள் சாந்தி அடைய வேண்டி ஆண்டவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியுடன் இணங்கப் பல விடயங்கள் உண்டாம்
## இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஒரு முற்போக்கான சிந்தனையான இடதுசாரி இயக்கம் என்ற வகையிலே அவர்களோடு இணங்கிச் செல்லக்கூடிய பல விடயங்கள் எங்களுக்கு இருக்கின்றது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மக்கள் சக்தியுடனான கலந்துரையாடலில், பல விடயங்களில் அவர்களுடன் இணங்கிச் செல்லக் கூடியதாக அமைந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்களின் தேர்தல் அறிக்கையைப் பொறுத்து இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது தீர்மானத்தை அறிவிக்கும்.

அவர்களுடனான இன்றைய சந்திப்பு முன்னேற்றகரமான பேச்சாக அமைந்தது. அனைத்து விடயங்களுக்கும் தீர்வு கண்டுவிடவில்லை. ஆனால் ஓர் ஆரம்பக் கலந்துரையாடல் என்ற வகையிலே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளக்கூடிய, நம்பிக்கை தரக்கூடியதாக இருந்தது.

மாகாணசபை முறைமையை முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும் அதனை நடைமுறைப்படுத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். தற்போது இருக்கின்ற மாகாணசபை முறைமை தமிழ் மக்களுக்கான தீர்வு அல்ல என்ற விடயத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதிலிருந்து நாங்கள் முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகளை இரு தரப்புக்களும் இணைந்து பேசி செல்ல வேண்டும் என்பதனை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளது - என்றார். ஒ-125-66)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் வியாபார நிலையத்திற்கு
**ஆண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.**
வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து தரப்படும்

தொடர்பு :- **076 915 8453**

(CS/55341) J-1

## நல்லூரில் வீட்டின் பகுதி வாடகைக்கு

இரண்டு பெண்கள் மட்டும் குடியிருக்கலாம்.
தனி அறை. இணைந்த குளியலறை.
மிகச்சிறிய சமையலறை.
பெரிய ஹோல் கொண்டது.
RENT - 16000/-

CALL :- **071 223 4566**

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு
**வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.**
வயது எல்லை 18 - 40
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- **077 445 8502**

(28136 ) J-1

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றிற்கு **கேக் ஐசிங்** தெரிந்த **ஆண், பெண் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.**
அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வயது எல்லை 18 - 40

(28136 B) J-1

தொடர்பு:- **077 445 8502**

# INVITATION FOR BIDS (IFB)
# IFB No : 2024/03
# DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
# VELANAI PRADESHIYA SABHA

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Velanai Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the civil works as described below.

| No | Contract No | Contract Name | Source of Fund | Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(18)/02/ Maintenance/2024 /02 | Renovation of East Beach Road, Mandaitivu, Velanai Pradeshiya Sabha | Maintenance-2024 | 1.271 | C8 & C9 in Highway Construction | 60 | 31-July-2024 | 19,000.00 | 28-Aug-2024 |
| 02 | NP/14/41(18)/02/ CF/2024/01 | Renovation of Aasari veethy at Velanai | Council fund-2024 | 1.008 | C8 & C9 in Highway Construction | 60 | 31-July-2024 | 15,000.00 | 28-Aug-2024 |
| 03 | NP/14/41(18)/02/ CF/2024/04 | Renovation of Malligaithalvu veethy at Pungudutivu | Council fund-2024 | 1.016 | C8 & C9 in Highway Construction | 60 | 31-July-2024 | 15,000.00 | 28-Aug-2024 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
4. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
5. Interested bidders may obtain further information from Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) and inspect the bidding documents at Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai from 12-June-2024 until 02-July-2024 between 09:00 Hrs to 15:00 Hrs on normal working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai from 12-June-2024 until 02-July-2024 between 09:00 Hrs to 15:00 Hrs on normal working days upon payment of a non-refundable fee of Rs.1,500.00.The method of payment will be by cash.
7. Bids (Original and Copy)shall be delivered to Chairman, Local Authority Procurement Committee, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai on or before 10:30 Hrs on 03-July-2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.
9. The Pre-Bid Meeting will be held at Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai on 26th June 2024 at 11:00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Velanai Pradeshiya Sabha,**
**Vangalavady junction, Velanai**
**12.06.2024.**

(CR/42632) J-1



# 22 கிலோ கஞ்சா குருநகரில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் 22 கிலோ கிராம் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-26)

# வேலணைப் பிரதேச உள்ளூராட்சி விழா

யாழ்ப்பணம், ஜூன் 12

வேலணைப் பிரதேச உள்ளூராட்சி விழா, வேலணை மத்திய கல்லூரி, சேர் வை.துரைசாமி ஞாபகார்த்த மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 1.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேலணைப் பிரதேசசபைச் செயலாளர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த்தீபன், சிறப்பு விருந்தினராக கல்லூரி அதிபர் இ.ஹஸ்ரன் றோய், வி.ஆர். தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் க.ஏ.ஜீவன்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் '13' கரு வரவேற்பு!

13ஆவது திருத்தம் தொடர்பான சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாட்டை முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வரவேற்றுள்ளார்.
கிளிநொச்சியில் வைத்து சஜித் பிரேமதாஸ, "பதவிக்கு வந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன்" என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பாக கரு ஜெயசூரிய தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டி உடனடியாக தீர்வுகாண வேண்டும். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மஹிந்த ஆகியோரும், ஜே.வி.பி.யின் அநுரகுமார திஸாநாயக்கவும் இதற்கு ஆதரவளிப்பர். புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் இதனை வரவேற்கும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறினால் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் - என்றார். (அ-ஒ-6)

## பிரித்தோம்...

ஜே.வி.பி.யினருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பொன்று தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சந்திப்புத் தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று (நேற்று) சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளோம். 2019 ஆம் ஆண்டு ஜே.வி.பி. முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் போது வெளியிடப்பட்ட கருத்துகள் தொடர்பிலும், புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பிலும் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.
13 ஆவது திருத்தம் என்பது அமுலில் இருக்கின்ற ஒன்று. அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. அதேபோல மாகாணசபை முறைமை என்பது தமிழ் மக்களினுடைய பிரச்சினைக்கான தீர்வா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. ஆகவே இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு புதியதொரு அணுகுமுறையை முன்னெடுக்கவேண்டும்.
பிற கட்சிகள் வடக்கிற்கு வருகின்றார்கள் பேசுகின்றார்கள். பலதைச் சொல்லுகின்றார்கள். ஆனால் அவர்கள் இதற்கு முன்பு ஆட்சிப்பீடத்தில் இருந்தவர்கள். நாங்கள் சொல்வதைச் செய்பவர்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பேச்சுகள் மூலம் புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.
இதேவேளை - கடந்த காலத்தைப் பேசிக் கொண்டிருந்தால் எதிர்காலத்துக்குரிய இலக்கை அடைந்துகொள்ள முடியாது. (அ-ம-125-66)

## முழுமையான...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் அதனையே குறிப்பிட்டிருந்தார். மாறாக பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படவேண்டும் என அவர் கூறவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்குக்கு ஒரு சட்டமும் தெற்குக்கு ஒரு சட்டமும் இருக்கமுடியாது. முழு நாட்டுக்கும் ஒரே சட்டம் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கான நியாயத்தை வழங்கவேண்டும் என்று தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார்.
13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் போது சமூக பொலிஸ் போன்றவற்றை மாகாணசபைகளுக்கு வழங்குவதில் சிக்கல் இல்லை. பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பெரும்பாலானவை மாகாணசபைகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்கள் அனைத்தும் கூட மாகாணசபைகளின் கீழேயே உள்ளன. அவர் கூறியதன் அர்த்தமும் இதுவே. அதனை விடுத்து பொலிஸ் அதிகாரம் முற்றாக வழங்கப்படும் என்பதல்ல.
அவ்வாறெனில் தற்போதுள்ளதுடன் சில ...ங்கள் இணையும். அந்த வகையில் சமூக பொலிஸ் மற்றும் சுற்றாடல் பொலிஸ் என்பவற்றை வழங்குவதில் சிக்கல் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். ஆனால் நான் இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் எதனை கேட்கவில்லை. வடக்கு மக்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும். வடக்கு மாணவர்களுக்கும் தெற்கிலுள்ள மாணவர்களைப் போன்றே கல்வி கற்பதற்கு உரிமையுள்ளது.
வடக்கு மக்களுக்கும் இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் ஏனைய மக்கள் அனுபவிக்கும் சகல வசதிகளையும் அனுபவிப்பதற்கான உரிமை உள்ளது. ஆனால் அவற்றை எமது நாட்டு அரசாங்கங்கள் வழங்கவில்லை. ஐ.தே.க. அரசாங்கமோ, பொதுஜன பெரமுன அரசாங்கமோ அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவே தான் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (ஒ-இ)

## தேர்தலைப்...

மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் மஹிந்த மேலும் தெரிவித்ததாவது:-
"அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படவேண்டும். அதனைப் பிற்போட முடியாது. அவ்வாறானதொரு முட்டாள்தனமான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்காது என்றே நம்புகின்றேன். அவ்வாறு இறங்கினால் அதுவே ஐக்கிய தேசியக்கட்சியின் இறுதிப் பயணமாக அமையும். பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார். பொதுஜன பெரமுன கட்சி மீதே மக்களுக்கு நம்பிக்கை உள்ளது" - என்றார். (அ-ம-44)

## வடக்கு...

என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சவால் விடுத்துள்ளார்.
சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-
பிறகு என்பதும், பின்னர் என்பதும், பிந்திய என்பதும் 'இல்லை' என்பதையே குறிக்கும். எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்காத அநுரகுமார, கடந்த காலத்தை மறந்துவிடுமாறு தெரிவிப்பதானது போலியான கருத்துகளே.
வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தனிநபர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அநுரவால் முடியுமா? அருகருகே இருக்கும் இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் நாடாளுமன்றப் பெரும்பான்மை பெற்றால் இணைக்கப்பட முடியும் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் கொன்றொழித்த இனப்படுகொலைக்கு துணைபோனவர்கள் ஜே.வி.பி.யினர். தொடர்ந்து தமிழினத்தை ஏமாற்றும் இத்தகையவர்களை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-125)

## பொது...

(நேற்று) சந்தித்தார். இதன்போதே, பொதுவேட்பாளரையே புளொட் ஆதரிக்கும் என்று அநுரவிடம் தெரிவித்துள்ளேன்.
வடக்கு- கிழக்கு பிரிக்கப்பட்டமை தொடர்பான அதிருப்தியை அநுரவிடம் வெளிப்படுத்தியுள்ளேன். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான செயற்றிட்டங்களை அநுர நடைமுறைப்படுத்தினால் நிச்சயம் அவருக்கு ஆதரவு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் மாற்றத்துக்கான கட்சியாக மக்கள் ஜே.வி.பி.யை பார்ப்பார்கள் எனவும் அநுரவிடம் எடுத்துரைத்தேன் - என்றார். (அ-ம-125)

## தமிழரசுடன்...

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவை திரட்டும் பொறுப்பு அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்த்தன உள்ளிட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் தலைமையிலான குழுவொன்றே விரைவில் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்தும் எனத் தெரியவருகின்றது. (அ-ம-44)

## 70 வீதமான..

"தமிழ் முற்போக்கு கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு பிரதான கட்சியுடனும் கூட்டணி அமைக்கவில்லை.
ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் உள்ள வாக்குகளும் தீர்மானமிக்கனவாக அமையும். வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு சிறந்த உறவுள்ளது. வடக்கில் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் சஜித்துக்கு சார்பான நிலைப்பாட்டில் உள்ளனர்.
குறிப்பாக வடக்கில் உள்ள வாக்குகளில் 70 முதல் 75 சதவீத வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்திக்கே கிடைக்கப்பெறும். முன்னர்தான் வடக்கில் கட்டளையின் பிரகாரமும், அழுத்தங்களின் பிரகாரமும் வாக்களிக்கப்படும். தற்போது அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. வடக்கு அரசியல் களமும் மாற்றம் கண்டுள்ளது" - என்றார். (அ-ம-44)

## இந்திய...

மாகாண இணைப்பாளருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்ததாவது:-
இந்திய மீனவர்களின் தடைக்காலம் எதிர்வரும் 15ஆம் திகதி நிறைவடைகின்றது. இந்த நிலையில் மீள இந்திய மீனவர்கள் தொழிலுக்குத் திரும்ப உள்ளார்கள். அதனைக் கட்டுப்படுத்தி அல்லது நிறுத்தி எமது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுமாறு வலியுறுத்தியுள்ளோம்.
நிறைவுற இருக்கின்ற தடைக்காலத்துக்கு மேலதிகமாக இரண்டு மாத காலங்கள் தடையை நீடிக்குமாறு கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம். மேலதிக தடைக்காலத்தில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையில் கலந்துரையாடலை ஏற்பாடு செய்து தருமாறும் கோரியுள்ளோம் - என்றார். (அ-ஒ-125)


யாழில் இருமாடி விற்பனைக்கு
Old Park Road சுண்டிக்குளி
யாழில் 2 பரப்பு 7.48 குளியில்
3243 ச.அடி
வீடு உடன் விற்பனைக்கு
070 257 5693, 077 661 3486
(CS/55288) J-1

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
➤ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
➤ இருபதடிப்பாதை (20).
➤ கைதடிச் சந்தி 100M தூரம்.
➤ சித்த வைத்தியசாலை முன்பாக.
➤ பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
➤ காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
➤ ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)
Golden Real Estate (pvt) Ltd Directer & Owner
077-029 4164
077-329 4130
077-294 1521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் 30 • 09 • 1985



வானகத்துள் 25 • 05 • 2023

## வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கன்

### திதி: பூர்வபக்க ஷஷ்டி

மழை பொழிந்த ஓர் நாளில் பறவைகள் கூடு திரும்பும் இளம் மாலைப் பொழுதில் இனிதாக நிகழ்ந்தது உன் ஜனனம்.

நீ தவழ்ந்து, தளர் நடை நடந்து, ஓடியாடி அன்னைக்கும் தந்தைக்கும் குழந்தையாய், சகோதரர்க்கு நற் தோழனாய், உன் ஆசான்களுக்கு நன்மாணாக்கனாய், வையகத்திற்கு இரட்சிப்பாளனாய் ஏற்றம் பல கண்டு தோளுக்கு மேல் வளர்ந்து அன்னைக்கும் தந்தைக்கும் தோள் கொடுப்பாய் என காத்திருந்த கணமொன்றில் சீதளச் சோளகமும் குயில்களின் கூவலும் நிறைந்த வைகாசி மாதப் பொழுதொன்றில் வணங்கிய தெய்வங்களுள் எதுன்னை காக்குமென திகைத்து திண்டாடி மன்றாட முன்னரே திடீரென நின்று போனதுன் இதயம்...

உற்றாரும் சுற்றாரும் கதறியழ உன் சக நண்பர்களும் கை பிசைய கண் நிறைந்த மருத்துவக் கண்காணிப்பையும் மீறி நீ வானகமேவினாய்.

ஆண்டு தான் ஒன்று........ மாறிடுமோ மறந்திடுமோ மனக் கவலை?

நீயில்லா வைத்தியசாலைப் பயணங்களும் நோய் நொடிகளும் எம்மைப் பதற வைக்கின்றன.

இன்றிருந்தார் நாளை இல்லாதிருப்பது நியதியெனினும் நல்லவர்க்கும் அல்லவர்க்கும் நன்மை மட்டுமே நாடிய நீயேன் சென்றாய்?

சொத்திருந்தும் புகழிருந்தும் சுற்றத்தார் இருந்தும் உன் இழப்பை எது ஈடு செய்யும்? உன் மரணம் எமக்கு போதி மரம் தான்.

வைத்தியசாலையொன்றை அமைத்து சேவையாற்றுவதே உன் எண்ணம் என்றாய்.

உன் எண்ணத்தைச் செயலாற்ற உன் தந்தையும் உன் குடும்பத்தவரும் உன் உற்ற நண்பர்களும் முனைந்துள்ளார்கள் முனைந்து வருகின்றார்கள்.

கவிதையின் காதலன் நீ

உனது வாழ்க்கை விதியின் கைகளில் சென்ற பின்னும் உன் நண்பர்களால் கவிதை வடிவில் உன் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது.

"இயற்கையோ இறைவனோ ஏதோவொன்றைக் கொடுக்காமல் இன்னொன்றைப் பறிப்பதில்லை. நமக்குத் தான் தொலைப்பது தெரிகிறது இருப்பது புரிவதில்லை..."

ஆம் இறைவன் பறித்தது உன்னை... கொடுத்தது உன் ஞாபகங்களை மட்டும்....

இறப்பு என்பது ஒரு நொடி.....

உன் நினைவால் ஒவ்வொரு நொடியும் இறந்து கொண்டிருக்கிறோம்.

உனது அறையும், உன் ஆடைகளும், ஓய்வுக்குப் பின் நீ வாசிக்கவென்று சேகரித்த உன் புத்தகங்களும் உனக்காகவே காத்திருப்பது போல் உன்னை அறிந்து கொள்ளாத, உன்னைக் காக்கத் தவறிய வலியுடன் நீ நேசித்த நாமும்....

காகத்தின் வடிவில் நீ வருவாயென நித்தம் காகத்திற்கு உணவிடும் உன் அன்னை...

ஒவ்வொரு தடவையும் உன் பெயரையே முதலில் உச்சரிக்கும் உன் தந்தை... என்ன சொல்லி ஆற்றி விட முடியும் வெந்து கருகும் இதயத்தை?

காதலனாய், காவலனாய், தலைவனாய், தந்தையாய் அரவணைத்துக் காத்திருந்தாய் உன் மனையாளை...

சூடிய மல்லிகை வாடு முன் அவள் கோலம் கலைத்து ஏன் சென்றாய்?

நீ உணவிற்கு வரும் நேரங்கள், தேநீர் வேளைகள், பிறந்த தினங்கள் விசேடங்கள் அனைத்தும் உன் வருகையின்றி கடந்து போகின்றன..

நீ எழுதிய கவிதை, நீ அணிந்த ஆடை, நீ அமரும் கதிரை, உன் பொருட்கள் பொத்தி பாதுகாத்திட இயலாத உன் வாசனை எதிலும் நீ முழுமையாய் இல்லை.... கனவில் கூட இல்லை...

உனக்கு என்ன வண்ணம் பிடிக்கும்? என்ன உணவு பிடிக்கும்? தெரிந்து கொண்டதேயில்லை...

தெரிந்து கொண்டு உன்னுடன் சேர்ந்து கொள்ள காத்திருக்கிறோம்... விரைவில் திரும்பி வா.....

**எமது மகன் வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கனின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் 12.06.2024 புதன்கிழமை (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருவதோடு அத்தருணம் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

(CS/716) J-1

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.